விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 025 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 29 செவ்வாய்க்கிழமை (13.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# கிளிநொச்சி முரசுமோட்டையில்
# கார் - பேருந்து கோர விபத்து

## 4 பேர் உயிரிழப்பு : ஒருவர் படுகாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ35 வீதியில் முரசுமோட்டை 4ஆம் கட்டைப் பகுதியில் கார் ஒன்று எதிரே வந்த பேருந்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான தில் காரில் பயணித்த நால்வர் உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)











## யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றுமதிகளை நேரடியாக முன்னெடுக்க ஒத்துழைப்பு

### வடக்கு ஆளுநரிடம் சுங்கத் திணைக்களப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்தே ஏற்றுமதி நடவடிக்கைகளை நேரடியாக முன்னெடுப்பதற்குரிய ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு இலங்கைச் சுங்கத் திணைக்களம் தயாராக உள்ளது என அதன் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, வடக்கு

15ஆம் பக்கம் பார்க்க



## 500 வீடுகளை நிர்மாணிக்க யாழுக்கு நிதி ஒதுக்கீடு

### மாவட்ட அரச அதிபர் பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



### பிரதமர் ஹரிணிக்கு எதிரான


## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழரசுக் கட்சி ஆதரவில்லை

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி அமைச்சரும் நாட்டின் பிரதமருமான ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இலங்கை தமிழ

15ஆம் பக்கம் பார்க்க



## பிரதமர் ஹரிணியை பதவி விலகக்கோரி கல்வி அமைச்சின் முன் போராட்டம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்களுடன், கல்வி அமைச்சின் முன் தொடர்ச்சியான 'சத்தியாக்கிரக' போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

02ஆம் பக்கம் பார்க்க




## வடமராட்சி செம்பியன்பற்றில் டிப்பரில் மணல் கடத்தல்

### சந்தேக நபர் கைது

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் கடத்திய ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக நீண்ட காலமாக மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்த டிப்பர் ஒன்றினை மருதங்கேணிப் பொலிஸார் கைப்

15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை திறம்பட வழி நடத்துவதற்காகச் செயற்படுத்தப்பட்டு வரும்

16ஆம் பக்கம் பார்க்க

## கடற்படையினரின் தேவைக்காக எழுவைதீவில் மக்கள் காணி சுவீகரிப்பு

### தடுத்து நிறுத்த அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் எழுவைதீவில் கடற்படையினரின் தேவைக்காக பொதுமக்களின் காணி சுவீகரிக்கப் படவுள்ளது.

இந் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த அனைவரும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பிலான ஊர்காவற்றுறை

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அநுர அரசாங்கம் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளனர்

## அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் வடக்கு ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டுள்ளனர். இவ்வரசாங்கம் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் கூடுதல் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்யூ டக்வொர்த் அவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மத்யூ டக்வொர்த், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று திங்கட்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றுக்கு, அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஸ்கானர் கருவிகளுக்காக, வடக்கு மாகாண மக்கள் சார்பில் உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

பாதுகாப்பை உறுதிப்படுத்தும் மிகப் பொருத்தமான உதவி இதுவே எனவும் ஆளுநர் பாராட்டினார்.

மேலும் மாகாணத்தின் பொருளாதாரம் குறித்துத் தெளிவுபடுத்திய ஆளுநர், வடக்கு மாகாணத்தில் விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி ஆகிய துறைகள் மிகுந்த வளமுடையவை.

ஆனால், இவை எவ்விதப் பெறுமதிசேர் செயற்பாடுகளுமின்றி மூலப்பொருட்களாகவே இங்கிருந்து வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. வடக்கில் இவற்றைப் பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கான தொழிற்சாலைகள் இல்லை. போருக்கு முன்னர் இயங்கிய தொழிற்சாலைகளும் தற்போது இல்லை.

எனினும், தற்போதைய அரசாங்கம் இந்நிலையை மாற்றியமைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

வடக்கு மாகாணத்தில் மூன்று விசேட முதலீட்டு வலயங்கள் அமைக்கப்படவுள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறைசார் முதலீடுகளுக்கான வாய்ப்புகளை வழங்கவுள்ளன. அதேவேளை, "த மனேஜ்மன்ட் க்ளப்" அமைப்பால் வடக்கு மாகாண முதலீட்டாளர் மாநாடு எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது. இவை சாதகமான சமிக்ஞைகளாக அமைந்துள்ளனஎன்றார். (ம-7)

## வடக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் யாழ். அரச அதிபருடன் சந்திப்பு



வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் புத்திக்க சிறிவர்த்தன அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களை நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜே. ஏ. சந்திரசேன அவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜீ. பி. ஜெயமஹ, யாழ்ப்பாண பொலிஸ் தலைமைப்பீட அதிகாரி பாலித செனவிரத்ன உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

அரசாங்க அதிபர் அவர்களுடனான சந்திப்பிற்குப் பின்னர் பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பங்குபற்றினார். (ம-7,33)

### 2026 முதல் காலாண்டில்

# சினோபெக் எண்ணெய்

## சுத்திகரிப்பு ஒப்பந்தம் நிறைவு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சினோபெக் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்தம் 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இறுதி செய்யப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு குறுகிய கால உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையில் நேற்று (12) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2027 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்ட 70 வது ஆண்டு நிறைவை கூட்டாகக் கொண்டாடுவதற்கு இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதும் இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்பு பங்காளித்துவத்தை முன்னெடுத்துச் செல்வதுமே இந்தச் சந்திப்பின் நோக்கமாக அமைந்திருந்தது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பல நூற்றாண்டுகளாக நிலவி வரும் நல்லுறவு மற்றும் ஏழு தசாப்தங்களுக்கு முன்னர் இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட நீண்டகால நட்பு மற்றும் காலத்திற்கேற்ற ஒத்துழைப்பு ஆகியவற்றை இரு அமைச்சர்களும் இதன்போது மீண்டும் உறுதிப்படுத்தினர். (ம-7)

### கூரிய ஆயுதத்தால்

## பொலிஸாரைத் தாக்க முயன்றவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு

(கொழும்பு)

வெலிகந்தையில் கூரிய ஆயுதத்தால் பொலிஸாரைத் தாக்க முயன்ற நபர் ஒருவர், பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

நேற்று மாலை வெலிகந்தைப் பகுதியில் மூவருடன் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை நிறுத்துமாறு போக்குவரத்துப் பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

எனினும், குறித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரின் கட்டளையை மீறிச் சென்றதுடன், அதன் செலுத்துனர் பின்னர் வீட்டிற்குச் சென்றுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த நபரைப் பின்தொடர்ந்து வீட்டிற்குச் சென்றபோது, அவர் கத்தியால் பொலிஸாரைத் தாக்க முயற்சித்துள்ளார்.

இதன்போது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபரின் கால் மற்றும் மார்புப் பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதுடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் இதற்கு முன்னர் 7 போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சந்தேகநபராக காணப்பட்டதுடன், தற்போது மேலும் இரண்டு குற்றவியல் வழக்குகள் தொடர்பில் விசாரணைகளை எதிர்கொண்டு வந்தவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த ஏனைய இருவரையும் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)


## வேலைவாய்ப்பு

அரசியல் விஞ்ஞானம் கற்கை கற்ற ஆய்வுகள் தொடர்பாகவும் சட்ட ஆய்வு தொடர்பாகவும் புத்தக வெளியீட்டில் ஆர்வமும் அனுபவமும் உள்ள நபர்கள் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் :

076 222 7817


### கிளிநொச்சி...

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முரசுமோட்டை நான்காம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை 4.40 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சி புன்னை நீராவி பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் தபேந்திரன் (வயது 34), குணரத்தினம் குணதர்ஷன்(வயது 32), யுவானி பிரசாத்(வயது34) மற்றும் முல்லைத்தீவு விசுவமடுவைச் சேர்ந்த பொன்னையா பூபாலன் (வயது 46) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

மேலும் காரில் பயணித்த விசுவமடு மேற்கைச் சேர்ந்த அருணாசலம் சுஜிதரன்(வயது 30) என்பவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று பிற்பகல் பரந்தனில் இருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பயணிகள் பேருந்து ஒன்றின் மீது முல்லைத்தீவு விசுவமடுவில் இருந்து பரந்தன் நோக்கி பயணித்த கார் ஒன்றும் முரசுமோட்டை சங்கரநாராயணர் ஆலயத்திற்கு அண்மித்த பகுதியில் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துத் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,315,316)

### பிரதமர்...

சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களை திரும்பப் பெறக் கோரியும், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்த சத்தியாக்கிரகம் முன்னெடுக்கப்படுகின்றது.

கல்வித் துறையில் அரசாங்கம் முன்மொழியவுள்ள மாற்றங்களுக்கு பரவலான எதிர்ப்பை எடுத்துக்காட்டும் வகையில், தங்கள் கோரிக்கைகள் தீர்க்கப்படும் வரை மறியல் போராட்டத்தைத் தொடர பங்கேற்பாளர்கள் உறுதியளித்துள்ளனர். (ம-7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் கிடையாது

## இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணி தெரிவிப்பு



(கொழும்பு) ..........................

**ஜனாதிபதியாக பதவி வகிக்கக் கூடிய சாத்தியங்கள், தற்போதைய மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு கிடையாது என இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர்களுடைய வரலாறு தற்பொழுது குப்பைத் தொட்டியில் வீசப்பட்டு விட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ராஜபக்ச குடும்பத்தின் அரசியலை மக்கள் ஏற்கனவே நிராகரித்து விட்டார்கள் என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

"ராஜபக்சர்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு எவ்வித சந்தர்ப்பமும் கிடையாது. நாமல் ராஜபக்ச ஜனாதிபதியானால் புதிய மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என கூறப்படும் கருத்துக்கள் நகைப்பிற்குரியவை.

குறிப்பாக பிரதமர் ஹரிணி அமரசூரியவிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் தீவிர சேறுபூசல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை.

பெண்களை இழிவு படுத்தக்கூடிய வகையில் ராஜபக்ச - ரணில் விக்ரமசிங்க மிக இழிவான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் கல்வி அரசியல் அமைப்பு நடவடிக்கைகள் திறந்த வெளிப்படை தன்மையுடன் கூடிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

கல்வி வணிக மயப்படுத்தப்படுவதனை வன்மையாக, கடுமையாக எதிர்ப்பதாகவும், குறிப்பாக பாடசாலைகளை மூடும் திட்டம் ஏற்புடையது அல்ல" எனவும் சமீர பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

# ஏக்கர் கணக்கில் பயிரிடப்பட்ட கஞ்சா தோட்டங்கள் முற்றுகை

## சந்தேக நபர்கள் மூவர் கைது

(கொழும்பு)

லுணுகம்வெஹெர மற்றும் எம்பிலிபிட்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கஞ்சா தோட்டங்கள் முற்றுகையிடப்பட்டு 3 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, லுணுகம் வெஹெர - உனத்துவேவ பகுதியில் கஞ்சா தோட்டம் ஒன்று முற்றுகையிடப்பட்டு சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லுனுகம்வெஹெர பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது, சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட 3,983 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தனமல்வில, தேவ்ரம்வெஹெர பகுதியை சேர்ந்த 39 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை, எம்பிலிபிட்டிய - புத்கந்த பகுதியில், கஞ்சா தோட்டம் ஒன்று முற்றுகையிடப்பட்டு இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட 7,130 கஞ்சா செடிகள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 43 மற்றும் 55 வயதுடையவர்கள் எனவும், எம்பிலிபிட்டிய, தோரகொலயாய பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# கெஹெலியவுக்கு

## எதிரான வழக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, அவரது மகன் ரமித் ரம்புக்வெல்ல, மகள் அமாலி நாயனிகா ரம்புக்வெல்ல மற்றும் அவர்களது பணியாளரான நிபுணி கிருஷ்ணஜினா ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை பெப்ரவரி 13 ஆம் திகதி மீண்டும் விசாரணை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கினை அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், தனது தனிப்பட்ட ஊழியர் குழாமில் வெளிநபர்களின் பெயர்களை பயன்படுத்தி, அவர்களுக்குரிய சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளைத் தனது சொந்த வங்கி கணக்குகளில் வைப்பிலிட்டதன் மூலம் ஊழல் மோசடி மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், குறித்த பிரதிவாதிகளுக்கு ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் தற்போது நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இணைய மோசடிகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

## சைபர் குற்றத்தடுப்புப் பிரிவு எச்சரிக்கை




(கொழும்பு)

குற்றப் புலனாய்வுத் திணைக்கள தலைமையகத்தில் புதிதாக நிறுவப்பட்ட சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து, இணைய மோசடிகள் மற்றும் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மற்றும் உதவி பொலிஸ் கண்காணிப்பாளர் தெரிவிக்கையில்,

இணைய மோசடிகளில் ஈடுபடுபவர்கள் குறித்து பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தனிப்பட்ட அல்லது நிதித் தகவல்களைப் பகிர்வது குறித்தும் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சமூக ஊடகங்களில் பரப்பப்படும் நிதி விடயங்கள் குறித்து எவரையும் நம்ப வேண்டாம் என அவர் மக்களுக்கு எச்சரித்துள்ளார்.

சமூக ஊடக தளங்கள் மூலம் நடத்தப்படும் மோசடிகள் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளைக் கையாள சைபர் குற்றத் தடுப்புப் பிரிவு முழுமையாகத் தயாராக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# நாட்டில் அதிகரிக்கும் வைரஸ் தொற்றுகள்

(கொழும்பு)

நாட்டில் வைரஸ் நோய்கள் பரவுவது அதிகரித்துள்ளதாக ஸ்ரீஜெயவர்தனபுர மருத்துவமனையின் ஆலோசகர் மருத்துவர் கே.வி.சி. ஜனக தெரிவித்துள்ளார்.

இன்ஃப்ளூயன்ஸா ஏ மற்றும் பி பரவல் மற்றும் இன்ஃப்ளூயன்ஸா அல்லாத வைரஸ் தொற்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், கொழும்பு மாவட்டத்தில் சிக்குன்குனியா வழக்குகளின் அதிகரிப்பு பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் முதல் ஒன்பது நாட்களில் பதிவான டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை 2,420 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# கார் - வான் மோதி விபத்து

## மூவர் உயிரிழப்பு பலர் காயம்



(கொழும்பு)

புத்தளம், முந்தல், நவத்தன்குளம் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை காலை கார் மற்றும் வான் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.


இந்த விபத்தில் சுமார் மூன்று பேர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கோலி, கில் அரை சதம்...

# நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரை வெற்றியுடன் தொடங்கிய இந்தியா!



**நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது**



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒருநாள் போட்டிகள் மற்றும் 5 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.


இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் வதோதராவில் நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணியின் கப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்படி நியூசிலாந்து முதலில் துடுப்பாட்டம் செய்தது. 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 300 ஓட்டங்கள் குவித்து, இந்தியாவிற்கு வெற்றி இலக்காக 301 ஓட்டங்களை நிர்ணயித்தது.

தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 49 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 306 ஓட்டங்கள் குவித்தது. இதன்மூலம் 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் உள்ளது.

இந்திய தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 93 ஓட்டங்களும் சுப்மன் கில் 56 ஓட்டங்களும் ஸ்ரேயாஸ் 49 ஓட்டங்களும் குவித்தனர். நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ஜேமிசன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 2 ஆவது போட்டி இன்று ராஜ்கோட்டில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# பாகிஸ்தானை வீழ்த்திய இலங்கை சமனில் முடிவடைந்த தொடர்




பாகிஸ்தான் அணி இலங்கையில் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வருகிறது. தம்புல்லாவில் நடந்த முதல் ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. 2 ஆவது போட்டி மழையால் கைவிடப்பட்டது. அதனால் பாகிஸ்தான் ரி-20 தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் இறுதி ரி-20 போட்டி தம்புல்லாவில் நடைபெற்றது. மழை காரணமாக போட்டி 12 ஓவராகக் குறைக்கப்பட்டது. நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் பந்துவீச்சைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 160 ஓட்டங்கள் குவித்தது. கப்டன் டாசன் ஷனகா 9 பந்தில் 5 சிக்சர் உட்பட 34 ஓட்டங்கள் குவித்தார். குசால் மெண்டிஸ் 16 பந்தில் 30 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் சார்பில் வாசிம் ஜூனியர் 3 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 161 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் களமிறங்கியது. முன்னணி வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். கப்டன் சல்மான் ஆகா 12 பந்தில் 3 சிக்சர், 5 பவுண்டரி உட்பட 45 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில், பாகிஸ்தான் அணி 12 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 146 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை வெற்றி பெற்றது. இதன்மூலம் ரி-20 தொடர் 1-1 என சமனில் முடிந்தது.

இலங்கை அணி சார்பில் ஹசரங்கா 4 விக்கெட்டும், பதிரனா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை ஹசரங்கா வென்றார். (3)

# சங்கக்காரவின் சாதனையை முறியடித்த விராட் கோலி!

சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்களின் பட்டியலில், இந்திய அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி இரண்டாம் இடத்தைப் பிடித்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.


நியூசிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், 93 ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்குக் காரணமான கோலி, இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

முன்னதாக குறித்த பட்டியலில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான குமார சங்கக்கார 28,016 ஓட்டங்களுடன் இரண்டாமிடத்தில் இருந்தார்.

இதன்படி குமார சங்கக்காரவை பின்தள்ளி தற்போது விராட் கோலி 2 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதற்கமைய 28,068 ஓட்டங்களுடன் இரண்டாமிடத்தில் உள்ள நிலையில், 34,357 ஓட்டங்களுடன் சச்சின் டெண்டுல்கர் முதலிடத்தில் உள்ளார்.

2008 ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமான கோலி, டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 என மூன்று வடிவங்களிலும் சேர்த்து இந்த இமாலய சாதனையை எட்டியுள்ளார். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-சீன வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு



(கொழும்பு)

நாட்டிற்கு விஜயம் மேற் கொண்டுள்ள சீன வெளி யுறவு அமைச்சர் வாங்யீயை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் நேற்று திங்கட்கிழமை காலை சந்தித்துள்ளார்.

இதன் போது, அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் வாங் யீ இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

டித்வா சூறாவளிக்குப் பின்னர் நாட்டின் மறு கட்டமைப்பு குறித்து மறு ஆய்வு செய்வதும், சீன அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிகள் குறித்து அறிவிப்பதும் சீன வெளி யுறவு அமைச்சரின் பயணத்தின் நோக்கமாகும். (நி)

# மத்திய மலைநாட்டில் கடும் பனிமூட்டம்

## வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

(ஹற்றன்)


மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் நிலவும் கடும் பனியுடனான வானிலையால் பல பகுதிகளில் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலை மற்றும் மாலை வேளைகளில் அதிகளவான பனிமூட்டம் நிலவுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் - நுவரெலியா மற்றும் ஹற்றன் - கொழும்பு வீதிகள் மற்றும் மலைப் பாங்கான பகுதிகளில் உள்ள துணை வீதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, வாகன ஓட்டுநர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், தெளிவான பார்வையைப் பெற வாகனத்தின் ஹெட்லைட்களை இயக்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி)

# பிரதமர் ஹரிணிக்கு எதிராக தேரர் போர்க்கொடி



(கொழும்பு)

தேசத்தைப் பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் வணக்கத்திற்குரிய எல்லே குணவன்ச தேரர், பிரதமர் ஹரிணி அமரசூரியவை கல்வி அமைச்சர் பதவியில் இருந்து நீக்கி அமைச்சரவை மறுசீரமைப்பு மேற் கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு ஒரு தகவல் அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பிய ஒரு செய்தியில், பிரதமரின் தலைமையில் முன்மொழியப்பட்ட ஒருதலைப்பட்ச கல்வி சீர்திருத்தங்கள், தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாடு, மக்கள் மற்றும் பௌத்த மதம் கடுமையான அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது என்பதை தேரர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் அல்லது நாட்டின் மீது எந்த அக்கறையும் காட்டாத இத்தகைய பலவீனமான அரசாங்கம், தேசத்திற்கும் அதன் குடிமக்களுக்கும் நேரடியாக தீங்கு விளைவிப்பதாக அவர் தெரிவித்தார்.

துறவிகள், பிற மதங்களைச் சேர்ந்த மதகுருமார்கள், ஆசிரியர்கள் அல்லது கல்வி நிபுணர்களிடமிருந்து எந்த கருத்தும் பெறப்படாததால், கல்வி சீர்திருத்தங்களில் வெளிப்படைத்தன்மை இல்லை என்றும் தேரர் குறிப்பிட்டார்.

எனவே, சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை ஆரம்பத்திலிருந்தே குறைபாடுடையது என்றும், செல்லுபடியாகாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஒரு துறவியாக தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றுவதாகக் கூறிய, எல்லே குணவன்ச தேரர், அரச தலைவராக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, நாட்டையும் மக்களையும் பௌத்த தர்மத்தையும் இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற விரைவாகச் செயற்படுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார். (நி)

# 15 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 15 மில்லியன் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் நேற்று திங்கட்கிழமை அதிகாலையில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 39 வயதுடைய திருமணமான தம்பதிகள் என தெரியவந்துள்ளது.

நேற்று அதிகாலை 02.30 மணிக்கு எதிஹாட் ஏர்வேஸ் EY-394 விமானத்தில் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர்.

6 சூட்கேஸ் பெட்டிகளில் 100,000 வெளிநாட்டுத் தயாரிப்பு "பிளாட்டினம்" சிகரெட்டுகள் மற்றும் 500 அட்டைப் பெட்டிகளில் சிகரெட்டுகளை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நாளை 14ஆம் திகதி நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (நி)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 80,614 வெடிபொருட்கள் மீட்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி மற்றும் முல் லைத்தீவு மாவட்டங்களில் 80 ஆயிரத்து614 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வட பகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாடுகளின் நிதியுதவியுடன் நிலக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவரும் ஸார்ப் நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2026 ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட தச்சடம்பன், அம்பகாமம், ஒழுமடு மற்றும் மாங்குளம், கொக்காவில் ஆகிய பகுதிகளிலும் புதுக் குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுகளிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவு பகுதிகளிலும் கண்டாவளை பிரதேச செய லக பிரிவுக்குட்பட்ட தட்டு வன்கொட்டி பகுதியிலும் 37 இலட்சத்து 22 ஆயிரத்து 430 சதுரமீற்றர் பரப்பள வில் இருந்து 80 ஆயிரத்து 614 அபாயகரமான வெடி பொருட்களை அகற்றியுள்ள தாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார். (S-315)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**223/81, தேவாலய வீதி, சங்கானை, வட்டாரம் -01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01 தேவாலய வீதியிலுள்ள இல 223/81 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **கதிரேசர் சபாபதிப்பிள்ளை பொன்னையா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோ. சிவஞானம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1587/27.01.1953 ஆம் இலக்க உறுதியால் **எட்வேட் துரைசிங்கம் ஸ்கொற்வும் பெண் பீயற்றிஸ் செல்வமலரும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த **கதிரேசர் சபாபதிப்பிள்ளை பொன்னையா** காலஞ்செல்ல குறித்த ஆதனம் **சோமசுந்தரம் சிவஞானம் பெண் தேவி** ஆகியவருக்கு முதுசமாக வந்தடைந்தது.

**சிவஞானம் சிறீராம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு S.S.குலநாயகம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 70/30.06.1984 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சோமசுந்தரம் சிவஞானமும் பெண் தேவியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

**சோமசுந்தரம் சிவஞானம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு றெஜீனா ரிறோன் அன்ரனிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1319/09.02.1994ஆம் இலக்க உறுதியால் **சோமசுந்தரம் சிவஞானம் சிறீராம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்.

**குட்டிப்பிள்ளை செல்வரத்தினம்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5601/10.08.1995 ஆம் இலக்க உறுதியால் குறித்த **சோமசுந்தரம் சிவஞானம்** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"குறிஞ்சியந்திடல்"**
இறை: **சங்கானை கிழக்கு**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 12**
எல்லைகள்: **கிழக்கு** - ஒழுங்கையும், முருகேசு சின்னத்தம்பியின் உரிமைக்காரருக்குரிய ஆதனமும் **வடக்கு** -ஒழுங்கை **மேற்கு** - ஆறுமுகம் சின்னத்தம்பிக்குரிய ஆதனம் **தெற்கு** -ஆறுமுகம் சின்னத்தம்பிக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம்

குறித்த **குட்டிப்பிள்ளை செல்வரத்தினம்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **குட்டிப் பிள்ளை செல்வரத்தினம்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**

(C-4807)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளையில் உள்ளக வீதிகள் சீரின்மையால் பொதுமக்கள் பாதிப்பு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட வற்றாப்பளை தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள உள்ளகவீதிகள் மிகக் கடுமையாகப் பாதிப்படைந்த நிலையில் அவ் வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.**



குறிப்பாக வற்றாப்பளை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பள்ளவெளி 1ஆம், 4 ஆம், 5 ஆம் குறுக்கு வீதிகள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

எனவே இவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளைக் கருத்திற்கொண்டு குறித்த வீதிகளைச் சீரமைத்துத்தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந் நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் துரைராசா ரவி கரன் குறித்த பகுதிக்கு நேர டியாகச் சென்று மக்கள் எதிர் நோக்கும் சிக்கல் நிலை மைகள் தொடர் பில் ஆராய்ந் தார். அத்துடன் கோரிக்கைகளை எழுத்து மூல மாக கையளிக்குமாறு தெரிவித்த துடன், குறித்த வீதிக ளின் சீரமைப்புத் தொடர் பில் தம்மால் கவனம் செலுத் தப் படு மென்வும் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

## தைப்பொங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள் ளையார் தேவஸ் தானத் தில் தைப்பொங்கல் பண்டி கையை முன்னிட்டு எதிர் வரும் 14. 01.2026 வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு விஷேட பூஜை வழிபாடுகள் ஆரம்பாகும் என ஆதீன கர்த்தாவும், பிரதம குருவு மாகிய சிவஸ்ரீ து.விவே கானந்தக் குருக் கள் அறிவித்துள்ளார். (8)


## புதுக்குடியிருப்பில் T56 ரவைகளுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு தேராவில் பகுதியில் T56 ரக துப்பாக் கிக்குரிய ரவைகள் வைத் திருந்த குற்றச்சாட்டில் 38 வயதுடைய நபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள் ளார்.

தேராவில் இளங்கோபுரம் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர்,மோட்டார் சைக்கிளில் புதுக்குடியிருப்பு நோக்கிப் பய ணித்துக் கொண்டிருந்த போது, விசேட அதிரடிப் படையினரு க்குக் கிடைத்த இரகசியத் தகவ லின் அடிப்படையில் முல்லைத் தீவு விசேட அதிரடி படை யினரால் சோதனைக்குட்படுத் தப்பட்டார்.

சோதனையின் போது குறித்த நபரின் உடைமையில் T56 ரக துப்பாக்கிக்குரிய 8 ரவைகள் வைத்திருந்தமை கண்டறியப்பட்டதையடுத்து.



மோட்டார் சைக்கிளுடன் அந்த 8 ரவைகளும் கைப்பற்றப்பட் டதுடன் குறித்த நபரும் கைது செய் யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள் ளதுடன், பொலிஸ் விசாரணை களின் பின்னர் முல்லைத்தீவு நீதி மன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (8-299)

## இலங்கை சுங்க திணைக்களத்திற்கு உயர் தொழில்நுட்ப ஸ்கானர்கள்



(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய எல்லைப் படையினரால் இலங்கை சுங்கத் திணைக் களத்திற்கு, 2 உயர் தொழில்நுட்ப ஸ்கானர்கள் வழங்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் மேத்யூ டக்வொர்த், இலங்கை சுங்க இயக்குநர் ஜெனரல் சீவலி அருகோட விடம் ஸ்கானர்களை அதிகாரபூர்வமாக கையளித்தார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் பயன்படுத்துவதற்காக குறித்த 2 ஸ்கானர்களும் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)



தாய் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாமும் இலவச மருத்துவ பரிசோதனையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாவைகலட்டி தெல்லிப்பழை, காந்தி ஜி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 450 | 400 | 400 | 350 | 270 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 | -- | -- |
| பச்சைமிளகாய் | 800 | 1000 | 800 | 800 | 800 | 1000 |
| தக்காளி | 600 | 600 | 700 | 600 | 550 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 250 | 150 | 200 | 100 |
| கோவா | 300 | 250 | 300 | 300 | 260 | 225 |
| கரட் | 500 | 450 | 600 | 500 | 450 | 400 |
| பூசணி | 150 | 160 | 150 | 200 | 140 | 120 |
| புடோல் | 300 | 250 | 200 | 300 | 300 | 225 |
| வாழைக்காய் | 150 | 130 | 150 | 240 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 350 | 400 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 800 | 700 | 400 | 1000 | 600 | 400 |
| வெண்டக்காய் | 400 | 300 | 250 | 500 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 250 | 250 | 250 | 320 | -- | 200 |
| பயற்றங்காய் | 650 | 500 | 400 | 600 | 700 | 300 |
| லீக்ஸ் | 500 | 400 | 500 | 600 | 450 | 400 |
| பீற்றூட் | 800 | 800 | 1000 | 800 | 850 | 650 |
| கறிமிளகாய் | 1000 | 1000 | 800 | 1000 | 800 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 500 | 400 | 600 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 350 | 400 | 350 | -- | -- |
| கீரை – 1 பிடி | 100 | 70-140 | 150 | 140 | -- | 150 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 | 250 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 120-180 | -- | 120 |
| இராசவள்ளி | 600 | 600 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 800 | 500 | 500 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 150 | 200 | 300 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 100 | -- | 80 |
| [illegible] | 150 | 200 | 100 | 150 | -- | 90 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கரத்தை, குளத்தடி ஸ்ரீ நாக பூசணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 7 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவங்கள் நடைபெறும்.

இவ் உற்சவங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன் கிழமை சப்பறத் திருவிழாவும் 15 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த் திருவிழாவும் 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை தீர்த் தத்திருவிழாவும் நடைபெற்று அன்றைய தினம் பால்குட பவனியும் 108 கலச சங்காபிஷேகமும் இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (8)

## எட்டு நாட்களில் 67,762 சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தகவல்


(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் எட்டு நாட் களில் மொத்தம் 67,762 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்து ள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.தரவுகளின் படி இந்தியாவில் இருந்து மொத்தம் 11,367 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். இது மொத்த வருகையில் 17.0% ஆகும்.மேலும், இந்த ஆண்டின் முதல் சில நாட்களில் ரஷ்யாவிலிருந்து 8,425பேரும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,067 பேரும், ஜேர்மனியிலிருந்து 5,306 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து 3,285 பேரும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

2025 ஜனவரியில் மொத்தம் 252,761 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்தனர். மேலும், கடந்த ஆண்டில் மொத்தமாக 2,362,521 வெளிநாட்டினர் இலங்கைக்கு வருகை தந்ததாக இலங்கை சுற்றுலா மேம் பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது. (நி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜகுமார் அவர்களால் 500 குடும் பங்களிற்கு பொங்கல் பானைகளும், பொங்கல்பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன.

(படம்- சிவசாந்தன்)



அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக

## ஒருவேளை உணவை தியாகம் செய்த கைதிகள்

(கொழும்பு)

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, இலங்கையிலுள்ள 10• சிறைச்சாலைகளைச் சேர்ந்த கைதிகள் தங்களது ஒரு வேளை உணவைத் தியாகம் செய்து, 34.6 இலட்சம் ரூபா மதிப்பிலான உணவுப் பொருட்களைப் பங்களிப்பாக வழங்கியுள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறைக்கைதிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒரு வேளை உணவைத் தவிர்த்து, அதன் மூலம் மிச்சப்படுத்தப்பட்ட பெருமளவிலான நிதியை உணவுப் பொருட்களாக வழங்கியுள்ளனர்.

இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள கைதிகள் இன, மத பேதமின்றிப் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களுக்காகத் தங்களது உணவைத் தியாகம் செய்து இந்த மனிதாபிமான உதவியைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேச சபை

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அசைவற்ற ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு மக்களின் ஆட்சேபனை பெறும் பொருட்டு செய்யப்படும் அறிவித்தல்**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 முதல் 146 வரையான பிரிவுகளுக்கு அமைவாக வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் உப அலுவலகங்கள் ரீதியாக (சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலி) மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

மேற்படி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பட்டியல்களை அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள இடப்பரப்புக்களை வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அந்தந்த உப அலுவலகங்களில் குறித்த ஆதனங்களின் சொந்தக்காரர்/வாடகைக் குடியிருப்பாளர் பரிசோதிக்கலாம்.

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட இவ் அசைவற்ற ஆதனங்களின் சொந்தக்காரராயினும் சரி வாடகைக் குடியிருப்பாளராயினும் சரி குறித்த மதிப்பீடுகளுக்கு எதிரான எழுத்திலான ஆட்சேபனைகளை உரிய ஆவணங்களுடன் இந்த அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கலாம் என இத்தால் பகிரங்க அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**சண்முகநாதன் ஜயந்தன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(C-4806) **13.01.2026**




## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

திருமதி. **ரஞ்சினிதேவி யோகரத்தினம்**

**பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியை - SLTS - I**

**1988.08.17 – 2026.01.12**





### சேவை விபரம்

- யா/ வதிரிவடக்கு மெதடிஸ்தமிசன் தமிழ் கலவன் பாடசாலை
  1988.08.17 – 1991.01.04
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  1991.01.05 – 1992.12.31
- யா/தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
  1993.01.01 – 1994.12.31
- யா/குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
  1995.01.01 – 1996.09.30
- யா/வதிரி வடக்கு மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலை
  1996.10.01 – 2000.12.31
- யா/தேவரையாளி இந்துக் கல்லூரி
  2001.01.01 – 2014.01.12
- யா/அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
  2014.01.13 –2026.01.12

**ஆசிரியப் பணியில் 38 வருடங்களாக சேவை புரிந்து ஓய்வு பெறும் எமது அன்பு உள்ளத்தை நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ வாழ்த்தி மகிழ்கிறோம்.**

(C-4805)

**மனோகரா,**
**அல்வாய்.**

**வாழ்த்துவோர்- பிள்ளைகள், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீனாவுக்கு போட்டியாக புதிய கடற்படை தளம் அமைக்கும் பணியில் இந்தியா!



(டில்லி)

பங்களாதேஷ் துறை முகங்களில் சீனா முதலீடு செய்து இராணுவ பயன் பாட்டுக்கு ஏற்ற வகையில், உட்கட்டமைப்பை உருவாக்கி வரும் நிலையில், இந்திய கடற்படை கொல்கத்தா அருகே புதிய கடற்படைத் தளம் அமைக்கும் பணியை தொடங்கியுள்ளது.

இந்தியாவை சுற்றி சீனா இராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சிக்கிறது.

இதற்காக பாகிஸ்தானின் குவாதர், இலங்கையின் அம்பாந்தோட்டை , மியான் மரின் கியாக்பியூ, பங்களாதேஷின் சிட்டகாங் என, பல நாடுகளில் துறை முகங்கள் மற்றும் இராணுவ தளங்களை உருவாக்கி வருகிறது.

இந்தியாவை சுற்றி, இது ஒரு மாலை போல் அமைந் துள்ளதால், இதை, 'ஸ்ட்ரிங் ஆப் பேர்ல்ஸ்' எனப்படும், முத்து மாலை உத்தி என அழைக்கின்றனர்.

இதற்கு பதிலடியாக இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் கடல் பாதுகாப்பை அதிகரிக்க அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் இணைந்து, 'குவாட்' அமைப்பை இந்தியா தொடங்கியுள்ளது.

சீனாவை எதிர்கொள்ளும் மற்றொரு முயற்சியாக, மேற்கு பங்களாதேஷ் மாநிலம், கொல்கத்தாவில் உள்ள ஹால்டியா துறைமுகம் அருகே, வ்ங்க கடலில் புதிய கடற்படை தளம் அமைக்கும் பணியை இந் திய கடற்படை தொடங்கி யுள்ளது. (3)

# ஈரானில் தொடரும் போராட்டம்; 500ஐ கடந்த உயிரிழப்புக்கள்!


(தெஹ்ரான்)

ஈரானில் போராட்டம் தீவிரம் அடைந்துள்ள நிலையில் 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனவெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் நாட்டில் அதிகரித்துள்ள பணவீக்கம், அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி அதிகரிப்பு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பித்த மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் 15 நாட்களாக நீடித்து வருகிறது.

போராட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டுள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.



வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயற்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது. அவர்களில் 8 குழந்தைகளும் அடங்குவார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2,600 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில் விக்கிப்பீடியா பக்கத்தின் புகைப்படம் ஒன்றைப் பகிர்ந்துள்ளார்.

அதில் அவரது பெயருக்குக் கீழே "வெனிசுலாவின் தற்காலிக ஜனாதிபதி" என்ற பதவி குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் அமெரிக்கப் படைகள் வெனிசுலா மீது பாரிய தாக்குதல் நடத்தி, அந் நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்தன.

அவர்கள் தற்போது நியூயோர்க்கிற்கு கொண்டு வரப்பட்டு,

# நேபாளத்தில் மன் கோரி பாரிய பே

## பாதுகாப்பை பலப்படுத்திய நேப



(காத்மாண்டு)

நேபாளத்தில் மீண்டும் மன்னராட்சி கோரி நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்ததை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேபாளத்தில் மன்னர் ஆட்சி இருந்த நிலையில், கடந்த 2008ஆம் ஆண்டு அது முடிவுக்கு வந்தது. இதையடுத்து, அங்கு ஜன நாயக முறைப்படி ஆட்சி நடை பெற்று வருகிறது. இந் நிலையில், மீண்டும் மன்னராட்சி கோரி நேபாள தலைநகர் காத்மாண்டுவில் நேற்று முன்தினம் மாபெரும் போராட்டம் நடைபெற்றது.

ஏராளமான மக்கள் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ...ின் ஜனாதிபதி நானே
## ...டி காட்டிய ட்ரம்ப்!

**(வோஷிங்டன்)**

**வெனிசுலா நாட்டின் பதில் ஜனாதிபதி தான்தான் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தனது சமூக ஊடக தளத்தில் பதிவிட்டுள்ளமை தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

போதைப்பொருள் பயங்கரவாதச் சதி குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரணையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனையடுத்து "வெனிசுலாவில் முறையான மற்றும் பாதுகாப்பான ஒரு ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை அமெரிக்காவே அந் நாட்டை வழிநடத்தும்" என ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெனிசுலா 30 முதல் 50 மில்லியன் பீப்பாய் எண்ணெய்யை அமெரிக்காவிற்கு வழங்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தை டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அந்த எண்ணெய் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் தனது கட்டுப்பாட்டில் இருக்கும் என்றும், அது வெனிசுலா மற்றும் அமெரிக்க மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

## சிரியாவில் ஐ.எஸ் அமைப்பினர் மீது மீண்டும் தாக்குதல் நடத்திய அமெரிக்கா!



(டமாஸ்கஸ்)

சிரியாவில் நிலை கொண்டுள்ள ஐ.எஸ் அமைப்பினர் மீது அமெரிக்கப் படைகள் சனிக்கிழமை மீண்டும் ஒருமுறை பாரிய வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இது அமைந்துள்ளது. கடந்த மாதம் சிரியாவின் பல்மைரா பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் அமெரிக்காவை சேர்ந்த இரு படையினர், அமெரிக்க மொழிபெயர்ப்பாளர் அயாத் மன்சூர் சகாத் ஆகியோர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அதன்படி, இந்த பதிலடி தாக்குதல் நடவடிக்கைக்கு அமெரிக்க நிர்வாகம் "ஒபரேஷன் ஹொக்கீ ஸ்டிரைக்" எனப் பெயரிட்டுள்ளது.

இந்த தாக்குதலில் சிரியா முழுவதும் பரவியுள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளின் பல முக்கிய நிலைகள் தகர்க்கப்பட்டன. இந்தப் பாரிய தாக்குதலில் அமெரிக்கப் படைகளுடன் நட்பு நாடுகளின் படைகளும் இணைந்து செயற்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து அமெரிக்க மத்திய கட்டளைத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்கள் வீரர்களுக்கு நீங்கள் தீங்கு விளைவித்தால், உலகின் எந்த மூலையில் நீங்கள் ஒளிந்திருந்தாலும் உங்களைக் கண்டுபிடித்து அழிப்போம். நீதியிலிருந்து உங்களால் தப்ப முடியாது என்பதே எங்களது வலுவான செய்தி" என்று எச்சரித்துள்ளது. (3)

## ...ன்னராட்சி
## ...போராட்டம்
### ...நபாள அரசு

கூடி போராட்டத்தில் ஈடுபட்டதால், அங்கு வன் முறை வெடித்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாகச் சென்றபோது பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தியதால், போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட் டவர்கள் கற்களைக் கொண்டு பொலிஸாரை தாக்கினர். பதிலுக்கு, தடியால் அடித்து பொலிஸார் போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தினர்.

இந்நிலையில், மீண்டும் போராட்டம் வெடிக்காமல் தடுக்கும் நோக்கில் காத்மாண்டுவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.


மேலும், உள்ளூர் நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. சில பகுதிகளில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தை முன்னின்று நடத்திய பிரபல தொழிலதிபர் துர்கா பிரசாய் என்பவரது வீடு அமைந்துள்ள காத்மாண்டுவின் பக்தாபூரில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பிரதமரின் வீடு, குடியரசுத் தலைவர் மாளிகை உள்ள இடங்களில் மக்கள் கூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த காத்மாண்டு மாவட்ட தலைமை அதிகாரி ஜிதேந்தர பஸ்நெட், "நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதும், போராட்டத்தின் போதும் அரசியல் சாசனம் வழங்கி உள்ள பேச்சு சுதந்திரம் மீறப்பட்டுள்ளது. மக்களை தூண்டும் விதமாக சிலர் பேசினர். இதன் காரணமாக, வன்முறை வெடித்தது. பலர் பொதுச் சொத்துக்களை நாசம் செய்தனர்" என்றார். (3)

## இலக்கை அடையாத
## பி.எஸ்.எல்.வி சி- 62 ரொக்கெட்



(ஸ்ரீஹரிகோட்டா)

"நேற்று விண்ணில் செலுத்தப்பட்ட பிஎஸ்எல்வி சி-62 ரொக்கெட் தனது இலக்கை அடையவில்லை," என இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து, நேற்றுத் திங்கட்கிழமை காலை 10.18 மணிக்கு, புவியை கண்காணிக்கும், இ.ஓ.எஸ், - என் 1 உட்பட, 18 செயற்கைக் கோள்களை சுமந்தபடி பி.எஸ்.எல்.வி, சி-62 ரொக்கெட் விண்ணில் பாய்ந்தது.

இது 2026ஆம் ஆண்டில் இஸ்ரோவின் முதல் ஏவுதல் என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டது.

இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்ட சற்று நேரத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டுப்பாட்டை இழந்தது. இதையடுத்து திட்டம் இலக்கை அடைய வில்லை என்று இஸ்ரோ தலைவர் நாராயணன் தெரிவித்தார்.

தரவுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நாராயணன் கூறியதாவது: பிஎஸ்எல்வி ரொக்கெட் நான்கு நிலைகள் கொண்டது.

அவற்றில் இரண்டு நிலைகள் திட எரி பொருளையும், அடுத்த இரண்டு நிலைகள் திரவ எரி பொருளையும் கொண்டவை. மூன்றாம் நிலையின் நிறைவு நேரம் வரை எல்லாம் நன்றாகவே சென்றன.


மூன்றாம் நிலை முடிவுக்கு வரும்போது ரொக்கெட்டில் தொழில்நுட்பக் கோளாறு கண்டறியப்பட்டது.

தொடர்ந்து பிஎஸ்எல்வி ரொக்கெட், திட்டமிட்ட பாதையில் இருந்து விலகியது. இதனால் திட்டம் இலக்கை அடைய வில்லை எனத் தெரிவித்துள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தைச் சேர்ந்த லண்டன் தொழிலதிபர்

# இலங்கையின் மீள் கட்டமைப்பிற்கு 10 மில்லியன் ரூபாய் நன்கொடை



(கொழும்பு)

டித்வாபுயல் காரணமாக பாதிக் கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும், இந்த இயற்கைப் பேரழி வால் சீரழிக்கப்பட்ட பகுதிகளை மறு சீரமைக்கவும் இலங்கை அரசு "இலங் கையை மீளமைக்கும் நிதியை" நிறுவி யது. இந்த தேசிய முயற்சிக்கு ஆதர வாக, வேலுப் பிள்ளை சிவசுந் தரம் 10 மில்லியன் ரூபாய் பெருந் தொகையை நன் கொடையாக வழங் கியுள்ளார்.

இங்கிலாந்தில் செயற்படும் வெஸ்ட ர்ன் ஜுவல்லர்ஸ் நிறுவனத்தின் நிறுவுனரும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆவரங்கால் சிவசக்தி திருமண மண்டபத்தின் நிறுவுனருமாகிய சிவசுந்தரம், தனது நன் கொடையை ஜனாதிபதியின் செயலா எர் கலாநிதி நந்திகா சனத் குமாநாயக்க அவர் களிடம் கையளித் தார். (நி-8-30)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>8 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSC, Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16401 | பிறப்பு: 1998-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>5இல் சூரி செவ் கி-பா: 18<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC, Software Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/16402 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-O/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16404 | பிறப்பு-1994-NRC<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BBA, Bank Staff(Canada)<br>எதிர்பார்ப்பு: only Canada<br>தொ.இ: G/16403 |
| பிறப்பு:1990-இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி-பா: 19<br>உயரம்:5'10"<br>தகைமை/தொழில்-QS, Stores (own)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/16409 | பிறப்பு-2000- இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>12 இல் செவ்<br>உயரம்-5'6"<br>தகைமை/தொழில்:Bank Staff<br>எதிர்பார்ப்பு: படித்த ஆண்<br>தொ.இ: G/16405 |
| பிறப்பு: 1983- இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி-பா: 40<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்-BSC, Junior Civil Engineer(UK)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16411 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>8 இல் சூரிசெவ்<br>கி.பா: 40<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் -France<br>எதிர்பார்ப்பு: Degree<br>தொ.இ: G/16406 |
| பிறப்பு: 1994- இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16412 | பிறப்பு: 1993 - இந்து<br>நட்சத்திரம்-விசாகம்<br>கி-பா: 21 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Dip in Management, Field Officer<br>எதிர்பார்ப்பு: அரச / தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16407 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 519

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## தவறு செய்யுங்கள்

ஒருவர் நின்றுகொண்டிருந்தார். நின்று கொண்டே யோசனை செய்து கொண்டிருந்தார்.

என்ன யோசனை என்று அவரைப் பார்த்து இன்னொருத்தர் கேட்டார்.

எப்படி எழுந்து கொள்வது என்று யோசனை செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்.

ஏற்கெனவே நின்று கொண்டிருக்கின்ற ஒருவர் எழுந்து கொள்வது எப்படி என்று யோசனை செய்கின்றாராம். இது எப்படி இருக்கு பாருங்கள்.

கீழே விழுந்தால் தானே எழுந்து கொள்ள முடியும்? அவர் முதலில் கீழே விழ வேண்டும். அதற்கு பின்பு அவர் எழுந்து கொள்ள முடியும்.

இந்த உலகத்திலே நடக்கக் கற்றுக் கொள்வதற்கு முன்னர் கீழே விழாத மனிதர்கள் யாராவது உண்டா? விழுந்து, புரண்டு எழுந்துதானே நடக்கக் கற்று கொள்கின்றான்.

நாம் தெரிந்துகொள்ள வேண்டியது ஒரு முக்கியமான உண்மை. உலகத்திலே தவறு செய்யாத மனிதர் கிடையாது.

அதனாலே எப்போதாவது உங்கள் வாழ்க்கையிலே தவறு செய்து விட்டால் அப்படியே மனம் உடைந்து போய் உட்கார்ந்து விடாதீர்கள்.

ஒரு தவறு நடந்துவிட்டால் அதை ஒரு பாடமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அதே தவறு மறுபடியும் நடக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தடைக்கல்லைப் படிக்கல்லாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஒரு அலுவலகம், அங்கே ஒரு உயர் அதிகாரி சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கினார். அவர் தனக்குக் கீழே பணிபுரிகிறவர்களிடம் என்ன சொல்வார் தெரியுமா?

இந்த நிறுவனத்திலே நீங்கள் எத்தனை தடவை வேண்டுமானாலும் தவறு செய்யலாம், ஆனால் ஒரு விடயம் ஒரே தவறை மறுபடியும் செய்யக்கூடாது என்பாராம்.

இதை மேம்போக்காகப் பார்க்கின்ற போது அவர் ஏதோ தன்னுடைய ஊழியர்களைத் தவறு செய்யத் தூண்டுவது மாதிரி தெரியும். ஆனால் உண்மை அப்படி இல்லை.

இன்றைக்கு நடப்பது என்ன தெரியுமா? அநேகமாக எல்லா மனிதர்களுமே ஒரே தவறைத்தான் மறுபடியும் மறுபடியும் செய்கிறார்கள்.

விளையாட்டு வீரர்கள் ஒரேமாதிரியான தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வது உண்டு.

கணக்கு எழுதுபவர்களைப் பாருங்கள் ஒரே தவறை மறுபடியும் செய்வார்கள். அலுவலகத்திற்கு வருபவர்களைக் கவனியுங்கள். ஒருநாள் தாமதமாக வந்தால் பரவாயில்லை. ஆனால் தினமும் தாமதமாக வருவார்கள்.

சரி இது மாதிரி, செய்த தவறையே திரும்பத் திரும்பச் செய்யிறதுக்கு என்ன காரணம்?

சோம்பல், ஞாபகமறதி, கவனக்குறைவு, தன்னுடைய திறமை மீது அளவுக்கு மீறிய நம்பிக்கை. இப்படி இவற்றில் ஏதாவது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒருதடவை செய்த தவறை மறுபடியும் செய்வதில்லை என்று முடிவு செய்து கொண்டு அதை செயற்படுத்தக் கற்றுக் கொண்டால் போதும். வாழ்க்கை வெற்றிகரமாக அமையும்.

ஒருத்தர் தன்னுடைய இரண்டு காதிலேயும் கட்டு (பண்டேஜ்) போட்டுக் கொண்டு வந்தார்.

என்ன சேர் ஆனது என்று விசாரித்தார் அவரது நண்பர்.

ஒன்றுமில்லை சேர் வீட்டிலே அதிக ஆர்வத்துடன் ரீவியில கிரிக்கட் மட்ச்பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது என் மனைவி துணி அயர்ன்பண்ணிக் கொண்டிருந்தார். அயான் பொக்சை அப்படியே வைத்துவிட்டு சமையலறைக்கு போய்விட்டார்.

அந்தச் சமயம் பார்த்து தொலைபேசி அடித்தது. அவசரமாக ஓடிப்போய் அதை எடுத்துக் காதிலே வைத்தேன். அப்போது தான் தெரியும் அது அயர்ன்பொக்ஸ் என்பது. சூடாக இருந்ததால் சுட்டுவிட்டது.

ஒரு காது சரி சார். இரண்டு காதும் ஏன் சார் அப்படி ஆச்சு?" என்றார் அவர்.

அதே ஆள் மறுபடியும் தொலைபேசியில் அழைத்தார் என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 15)
# எதிர்கால வீட்டு மின்சாரம் - பொறியியல் பார்வையில் ஒரு புதிய மாற்றம்




இலங்கை தற்போது வீட்டு மின்சார தேவையில் மிகப்பெரிய உயர்வை எதிர் கொண்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணமாக பொருளாதார வளர்ச்சி மற்றும் வாழ்க்கை முறையின் மாற்றம் குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில், தேசிய மின்சார சபை பல சவால்களை சந்தித்து வருகிறது. குறிப்பாக உயர்ந்து வரும் மின்தணிக்கை, இறக்குமதி செய்யப்படும் உயிரி எரிபொருட்கள் மீதான சார்பு, grid-இன் நிலைத்தன்மை குறைவு மற்றும் செயலற்ற மின்சார பயன்பாட்டு பழக்கவழக்கங்கள் போன்றவை. சுமார் 6.6 மில்லியனுக்கும் மேற்பட்ட வீட்டு நுகர்வோர் மொத்த மின் நுகர்வோரின் 85% ஆக உள்ளனர். எனவே, வீட்டு மின்மேலாண்மை தற்போது தேசியளவிலான அவசியமாக மாறியுள்ளது.

சிறந்த சூரிய மற்றும் காற்றாலை வளங்களை கொண்ட வட மாகாணம், வீட்டை வெறும் மின்சார நுகர்வு இடமாக மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யும், சேமிக்கும், மேலாண்மை செய்யும் மற்றும் பகிரும் திறன் கொண்ட Smart Prosumer முறைமைக்கு மாற்றும் வாய்ப்பை வழங்குகிறது.

### வீடுகளை 'Smart Prosumers' ஆக மாற்ற வேண்டிய அவசியம்

இலங்கையில் மொத்த மின் நுகர்வோரில் சுமார் 85% பேர் வீட்டு நுகர்வோராக உள்ளனர்.

வீடுகளில் அதிக மின் பயன்பாடு காலை மற்றும் இரவு நேரங்களில் (Peak hours) ஏற்படுகிறது. ஏற்கனவே "Duck Curve" எனும் சவாலை எதிர்கொள்ளும் மின்துறை, மதிய நேரங்களில் சூரிய மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகியும், அதற்கேற்ப பயன்பாடு குறைவாக இருப்பது மின்துறைக்கான ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இந்த நிலையை தீர்க்கும் நோக்கில், வீடுகள் இனி வெறும் மின்சாரம் பெறும் இடமாக மட்டும் இல்லாமல், மின்சாரத்தை தோற்றுவிக்கும் (generate), சேமிக்கும் (store), சிறந்த முறையில் மேலாண்மை செய்யும் (manage), மேலும் தேவைப்பட்டால் பகிரும் (share) பொறுப்புள்ள மற்றும் சக்திமிக்க இடங்களாக மாற்றப்பட வேண்டியுள்ளது.

இந்த மாற்றமே நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, பொருளாதார சுதந்திரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அடிப்படையாக அமையும்.

### வீட்டு மின்சாரத்திற்கான புதிய வளமாக புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

கூரைமீது Solar PV அமைப்பு தற்போது தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகச் சிறந்த தீர்வாக கருதப்படுகிறது. வட மாகாணத்தில் சூரிய ஒளி அதிகமாக உள்ளதால், அத்தகைய அமைப்புகள் இன்னும் வலுவான முதலீடாக விளங்குகின்றன.

இதனுடன் கூடுதலாக, உணவு கழிவு அல்லது விவசாய கழிவு போன்ற பொருட்களிலிருந்து Biogas உற்பத்தி செய்வது, இரவு நேர மின் தேவையை நிவர்த்தி செய்யக்கூடிய ஒரு பயனுள்ள தீர்வாக அமைகிறது. கடற்கரைப் பகுதிகளில் உள்ள வீடுகளில் கூரைமீது அமைக்கப்படும் சிறிய அளவிலான காற்றாலை மின்சாரம் கூட மொத்த மின் வழங்கலில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும்.

இவ்வாறு Solar + Battery + Biogas ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்ட Hybrid Systems, வீட்டிற்கு தன்னிறைவு மின்னுற்பத்தியை வழங்கி, மின்வெட்டு நேரங்களிலும் தினசரி வாழ்க்கையை தடையின்றி தொடர அனுமதிக்கின்றன. மேலும், 4 முதல் 7 ஆண்டுகளுக்குள் முதலீட்டுத் தொகையை மீட்டெடுக்கக் கூடியதாக இருப்பதால், இது பொருளாதார ரீதியாகவும் நம்பிக்கைக்குரிய மற்றும் நிலைத்த மாற்றமாக விளங்குகிறது.

### மின் மேலாண்மையின் எதிர்காலம்

நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வீட்டின் மின்சார பயன்பாட்டை புத்திசாலித்தனமாக கண்காணித்து ஒழுங்குபடுத்தும் திறனை வழங்குகின்றன. Smart Meters, IoT அடிப்படையிலான இயந்திர கட்டுப்பாடுகள் மற்றும் AI சார்ந்த மின் பயன்பாட்டு கணிப்பு ஆகியவை, நீர்ப் பம்புகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் அல்லது மின்கார்கள் சார்ஜ் செய்யும் நேரங்களை peak hours-இல் இருந்து தள்ளி மாற்ற அனுமதிக்கின்றன.

மின்சாரம் grid-இலிருந்து எடுத்தலா, battery-யிலிருந்து எடுத்தலா அல்லது solar-இலிருந்தா என்பதை தானாகத் தீர்மானிக்கும் automated balancing systems வழியாக மின்கட்டணத்தை கணிசமாகக் குறைக்க இயலும்.

மேலும், எதிர்கால நகரங்கள் microgrid communities, blockchain அடிப்படையிலான energy trading மற்றும் Vehicle-to-Grid (V2G) போன்ற புதிய தொழில்நுட்பங்களைத் தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு நகரும்.

### மக்கள் ஒத்துழைப்புடன் புதிய அரசுக் கொள்கையின் அவசியம்

புதிய மாற்றங்களையும் புதுமைகளையும் மக்களிடம் கொண்டு செல்ல, அரசின் கொள்கை மாற்றங்கள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. Time-of-Use tariff முறையை பொதுவாக்குதல், battery மற்றும் solar உபகரணங்களுக்கான இறக்குமதி வரிச் சலுகைகள், smart meter தரநிலைகளை பதிவு செய்து நடைமுறைப்படுத்துதல் போன்ற முடிவுகள் விரைவாக அமல்படுத்தப்பட வேண்டும்.

இதனுடன், பல்கலைக்கழகங்கள் - தொழில் நிறுவனங்கள் - அரசு இணைந்து செயல்படும் ஆராய்ச்சி மற்றும் சோதனைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

இவ்வகையான முயற்சிகள், இத்துறையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு, தனியார் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகளையும் விரிவுபடுத்தும். இதற்காக உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதும், தேவையான தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குவதும் முக்கியமானதாகும்.

### முடிவுரை

இறுதியாக, மின்சார உற்பத்தி மட்டும் போதாது. மின்சாரத்தை சமயோசிதமாக நிர்வகிக்கும் திறன் எதிர்காலத்தின் முக்கியமான திறனாக விளங்குகிறது. புதுப்பிக்கத்தக்க மின்சாரம், smart management மற்றும் decentralized energy sharing ஆகியவை ஒன்றிணைந்து, வீடுகளை தன்னிறைவு பெற்ற சிறிய மின் நிலையங்களாக மாற்றும் வல்லமை பெற்றவையாக உள்ளன.

இம்மாற்றம் peak demand-ஐ குறைப்பதோடு மட்டுமல்லாமல், வினைத்திறன் மிகுந்த மின்பயன்பாட்டிற்கும், net-zero carbon emission இலக்கை அடைவதற்கும் உறுதியான வழிவகுப்பை வழங்குகிறது.

குறிப்பாக, வட மாகாணம் இந்த மாற்றத்தின் முன்னோடியாக அமையக்கூடிய சிறப்பான திறனைக் கொண்டுள்ளது. இதன் விளைவாக, வட மாகாணத்தில் புதியதும் அதிகமானதும் வேலைவாய்ப்புகள் உருவாக வாய்ப்புள்ளது.

இத்தகைய முனைப்புகள், வலுவான அரசுக் கொள்கை ஆதரவும் பொதுமக்கள் விழிப்புணர்வும் ஒன்றிணைந்தால், இலங்கையின் மின்சார எதிர்காலத்தை பாதுகாப்பானதாகவும், நிலையானதாகவும் மாற்ற இயலும். உண்மையான மாற்றத்திற்கு, பல தனிநபர் முயற்சிகள் ஒன்றிணைவதே அடித்தளமாகும்.

எதிர்கால வீட்டு மின்சாரம் - இது கனவல்ல, இன்று தொடங்கக்கூடிய ஒரு சாத்தியம்.

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

---

# இராசிபலன்

**13.01.2026**
**மார்கழி 29 , செவ்வாய்க்கிழமை**
**தசமி பிற்பகல் 5.31 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 2.07 மணிவரை**

**சுபநேரம் 11.03-12.33 மணிவரை**
**இராகுகாலம் 3.33-5.03 மணிவரை**

**சந்திராஷ்டமம்- ரேவதி, அச்சுவினி.**

**வளவன்**




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பயணங்களால் பலனுண்டு, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அதிஷ்டகரமான நாள்.




எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.




சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும்.




வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




வீண் பழிகள் அகலும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.




மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




திறமை மிக்கவர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வாக்கு மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.




பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம்.




எதையும் பலமுறை யோசித்து செய்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**அகம்பாவத்தைவிட பணிவானது அதிக ஆதாயத்தைப் பெறுகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 953





ஆதித்த கரிகாலனுடைய அகம்பாவமும், சிற்றரசர்களைச் சிறிதும் மதியாமல் அவன் நடந்து கொண்ட விதமும் சம்புவரையர்களின் வெறுப்பு வளர்வதற்கு மேலும் காரணம் தந்தது. ஆகையினாலேயே கண்டராதித்தருடைய குமாரன் மதுராந்தகனைத் தஞ்சை சிம்மாசனத்தில் ஏற்றி வைக்கும் முயற்சியில் சம்புவரையர்கள் ஊக்கமாக ஈடுபட்டார்கள்.

ஆனால் கரிகாலன் கடம்பூருக்கு வந்த நாளிலிருந்து பெரிய சம்புவரையரின் உள்ளம் சிறிது சிறிதாக மாறுதல் அடையலாயிற்று. அவருடைய செல்வப் புதல்வியாகிய மணிமேகலையே அவருடைய மன மாறுதலுக்குக் காரணமாயிருந்தாள்.

ஆதித்த கரிகாலனுடைய உள்ளத்தை மணிமேகலை கவர்ந்து விட்டாள் என்பதற்குப் பல அறிகுறிகள் தென்பட்டன. பெண்களைக் கண்ணெடுத்தும் பாராதவன் என்றும், பிரம்மச்சாரியாகவே காலத்தைக் கழிக்கப் போகிறான் என்றும் கரிகாலனைப் பற்றி பேசப்பட்டு வந்தது.

அத்தகையவன் கடம்பூர் மாளிகைக்கு வந்ததிலிருந்து அடிக்கடி பெண்கள் இருக்கும் இடம் போவதும் அவர்களுடன் உல்லாசமாகப் பேசுவதுமாக இருந்தான். முக்கியமாக அவன் மணிமேகலையின் 'சூடிகை'யைப் பற்றி அடிக்கடி பாராட்டிப் பேசினான்.

கரிகாலன் வந்ததிலிருந்து மணிமேகலையும் ஒரே உற்சாகமாக இருந்தாள். அதற்குக் காரணம் அவளும் கரிகாலனிடம் பற்றுக் கொண்டது தான் என்று பெரிய சம்புவரையர் கருதினார். அவர்கள் இருவருடைய குதூகலத்தையும் பார்த்துப் பார்த்துச் சம்புவரையரும் உற்சாகம் கொண்டார்.

கரிகாலன் மணிமேகலையை மணந்து கொண்டால் தம் செல்வத் திருமகள் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினியாக விளங்குவாள்! அவளுக்குப் பிறக்கும் குழந்தையும் தஞ்சை சிம்மாசனத்துக்கு உரியவனாவான்! இன்று திருக்கோவலூர் மலையமான் அடைந்திருக்கும் பெருமிதத்தை அப்போது தாமும் அடையலாம்.

அதற்கெல்லாம் தாமே எதற்காகத் தடையாக இருக்கவேண்டும்? தமது அருமைக் குமாரியின் ஏற்றத்துக்குத் தாமே ஏன் இடையூறு செய்ய வேண்டும்? மதுராந்தகனுக்குத் தம் மகளை மணம் செய்விக்கலாம் என்ற யோசனை முன்னம் சம்புவரையருக்கு இருந்தது உண்மைதான். ஆனால் மதுராந்தகனுக்கு ஏற்கெனவே இரு மனைவியர் இருந்தனர். சின்னப் பழுவேட்டரையரின் மகளை அவன் மணந்திருந்ததுடன், அவளுக்கு ஓர் ஆண் மகனும் பிறந்திருந்தது. ஆகையால் மதுராந்தகன் சிம்மாசனம் ஏறினால் பழுவேட்டரையரின் வம்சத்தினர்தான் பட்டத்துக்கு உரிமை பெறுவார்கள். மணிமேகலை தஞ்சை அரண்மனையில் உள்ள பல சேடிப் பெண்களில் தானும் ஒருத்தியாக வாழ வேண்டியிருக்கும்.

ஆனால் ஆதித்த கரிகாலனை மணிமேகலை மணம் செய்து கொண்டால் அவள் தான் பட்ட மகிஷியாயிருப்பாள். அவளுக்குப் பிறக்கும் பிள்ளைக்கே சிம்மாசனம் உரியதாகும். மதுராந்தகனுக்குப் பட்டம் சூட்டுவதென்பது பிரம்மப் பிரயத்தனமான காரியம். மக்கள் அதற்கு விரோதமாயிருப்பார்கள்.


மலையமானுடனும் கொடும்பாளூர் வேளானுடனும் போராட்டம் நடத்தித்தான் அதைச் சாதிக்க வேண்டியதாயிருக்கும்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## இறக்கும் முன் ஈகை செய்



ஓர் ஊரில் செல்வன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் குழந்தைகள் இல்லை. இருந்தாலும் அவன் பெரிய கருமியாக இருந்தான். யாருக்கும் எதுவும் தர அவனுக்கு மனம் வருவதில்லை. ஊர் மக்கள் எல்லாம் அவனைக் குறை கூறிவந்தார்கள்.

துறவி ஒருவரிடம் ஒரு நாள் அந்தக் கருமி சென்றான். "ஐயா நான் இறந்த பிறகு என் சொத்துக்கள் அனைத்தும் தர்மத்திற்குத் தான் செல்லப் போகின்றன. ஆனால் ஊர் மக்கள் என்னைப் பாவி என்று திட்டுகின்றார்கள். ஏன் என்று தெரியவில்லையே" என்று கேட்டான்.

அதற்கு துறவி "அப்படியா? ஒரு சமயம் பசு மாட்டிற்கும் பன்றிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை உனக்குச் சொல்கிறேன். உனக்கே உண்மை விளங்கும்" என்று கூறினார் துறவி.

"சொல்லுங்கள்" என்றான் கருமி. "ஒருசமயம் பன்றி ஒன்று மாட்டைப் பார்த்து மக்கள் எல்லோரும் உன்னைப் பற்றியும் உன் இனிய இயல்புகளைப் பற்றிம் புகழ்ந்து பேசுகிறார்கள். அதுவும் உண்மை தான் நீ அவர்களுக்காகப் பால் தருகிறாய் ஆனால் நானோ உன்னை விட அதிகம் தருகிறேன். என் இறைச்சியை மக்கள் உண்ணப் போகிறார்கள். என் தொடைக் கறியைச் சுவைக்கப் போகிறார்கள். என் பாதங்களைக் கூட மென்று தின்னப் போகிறார்கள். என் உடலின் எந்தப் பகுதியையும் அவர்கள் விடப் போவதில்லை.

நான் என்னையே முழுமையாகத் தரப் போகிறேன். இருந்தாலும் மக்கள் என்னைப் பாராட்டாமல் இகழ்கிறார்களே இதன் காரணம் என்ன?" என்று வருத்தத்துடன் கேட்டது.

இதை கேட்ட மாடு சிறிது நேரம் சிந்தித்தது. பிறகு பன்றியைப் பார்த்து நான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்கு பயன்படுகிறேன். அதனால்தான் எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள்" என்று பதில் சொன்னது என்று முடித்தார் துறவி.

கருமி உண்மையை உணர்ந்தான். நான் உயிருடன் இருக்கும் போதே மக்களுக்கு வாரி வழங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காரியத்தின் மீது அன்பும், பிறரது விசேஷ பாகத்தின் நம்பிக்கையும் இருந்தால் ஒத்துழைப்பு தானாக வரும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழக முதல்வர் எழுதிய கடிதம் திருமாவளவன் தயாரித்த நாடகம்

ஒரு காலத்தில் ஈழத் தமிழ் மக்களுக்காக பட்டிதொட்டியெல்லாம் குரல் கொடுத்தவர் தொல்.திருமாவளவன். எனினும் சேராத இடம் சேர்ந்ததன் காரணமாக பின்னாளில் எங்களை அவர் மறந்துபோனார்.

ஆம், 2006களில் கலைஞர் கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது மத்தியில் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தார். அந்த நேரத்தில்தான் வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழின அழிப்பு ஆரம்பமாகியது.

விடுதலைப் புலிகள் மீது காங்கிரஸ் கொண்டிருந்த பகைமை அப்பாவித் தமிழ் மக்களை வதம் செய்தது.

அந்நேரத்தில் நிலைமையை விளக்கி ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றக்கூடிய சக்தியும் தகைமையும் கலைஞர் கருணாநிதிக்கு மட்டுமே இருந்தது.

ஆனால் கலைஞர் கருணாநிதி எங்களைப் பற்றி இம்மியும் நினைக்கவில்லை. மாறாக, தனது நிலைப்பாடு காரணமாகத் தமிழக மக்கள் தன் மீது எதிர்ப்புக் கொண்டுவிடக்கூடாது என்பதன் பொருட்டு; உண்ணாவிரதம் எனும் நாடகத்தை தானே இயக்கி தானே நடித்து முடித்தார்.

ஆம், திரைப்படங்களுக்குக் கதை – வசனம் எழுதிய கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர்களின் விடயத்தில் கதை – வசனம், தயாரிப்பு, நடிப்பு என அனைத்தையும் தானே செய்தார்.

அவர் நடித்த **உண்ணாவிரதம்** சிலரால் இனங்காணப்பட்டதாயினும் பலர் தொலைக்காட்சிகளின் அதீத பிரசாரங்களால், கலைஞர் கருணாநிதி ஈழத் தமிழர்களின் விடயத்தில் மிகவும் கருசனையோடு உள்ளார் என நம்பினர்.

என்ன செய்வது எங்கள் உடன்பிறப்பாகிய தமிழகம் எங்களை கைவிட்ட நாள் அது. அதைச் செய்தவர் கலைஞர் கருணாநிதி இதுவே உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தொல்.திருமாவளவன் கலைஞருக்கு அடுத்ததாக ஒரு நாடகத்தைத் தயாரித்தார்.

தமிழ் அரசியல் தரப்புகள், தமிழகத் தலைவர்களுடன் சந்திப்பு என்பதே அந்த நாடகத்தின் மூலம்.

ஆம், நம்மவர்கள் தமிழகம் சென்றனர். அங்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்தனர். புதிய அரசியலமைப்பு இலங்கையில் ஒற்றையாட்சி முறைமையை நிலைநிறுத்தப்போவதாகக் கூற, அவர் (ஸ்டாலின்) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு கடிதத்தை எழுதினார்.

கடிதத்தில் எழுதப்பட்டவை தெரிந்தவையே. இங்குதான் திருமாவளவன் எழுதிய கதை வசனத்துக்கு கடிதம் எழுதுவதன் மூலம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நடிபங்கேற்றுள்ளார்.

இனி அந்தக் கடிதத்தைக் கண்ட மாத்திரத்தில் பிரதமர் மோடி உடனடியாக ஜனாதிபதி அநுரவுடன் கதைத்துக் காரியம் பார்ப்பார் என நாம் நம்ப வேண்டுமாம்.

என்ன செய்வது, தமிழக சட்டசபைத் தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்ட அந்த நாடகத்துக்கு நம்மவர்கள் துணைபோனது மட்டுமே கண்ட மிச்சம்.

# சோமரத்ன வழங்கிய தகவல்களின் பிரகாரம் நவீன ஸ்கேனர் மூலம் செம்மணியில் அகழ்வு

## காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் தெரிவிப்பு

நல்லூர் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் காணப்படுவதாக மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ குறிப்பிட்ட இடங்களை அடையாளப்படுத்தி, நவீன ரக ரேடார் ஸ்கேனர்களைப் பயன்படுத்தி அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் அறிவித்துள்ளது.

மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறையிலுள்ள முன்னாள் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இது குறித்து ஊடகம் ஒன்றுக்குக்கருத்துரைத்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த,

சோமரத்ன ராஜபக்ஷவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டு அவை தொடர்பில் மனிதப் புதைகுழி அகழ்வில் ஈடுபடும் நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கவுள்ளோம். அதன் பின் விபரங்களை நீதிமன்றில் சமர்ப்பித்து அகழ்வுக்கான நீதிமன்ற உத்தரவு பெறப்படும்.

அதன் பின்னர், நவீன ரக ரேடார் ஸ்கேனர்களை பயன்படுத்தி செம்மணி மனிதப் புதைகுழியை அண்மித்த பகுதிகளில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும்.

சோமரத்ன ராஜபக்ஷ சத்தியக் கடதாசி ஊடாக தெரிவித்துள்ள பல விடயங்கள் குறித்தும் இதன் போது அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

*(ம-7)*

## மிளகாய் வகைகளின் காரத்தை மிஞ்சியது விலை

நாட்டில் அண்மைக் காலமாக மிளகாய் வகைகளின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் நுகர்வோர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று மிளகாய் வகைகளின் சில்லறை விலைகள் சடுதியாக உயர்ந்து காணப்பட்டன. சந்தை நிலைவரங்களின்படி, ஒரு கிலோ கிராம் கறிமிளகாய் 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

குடைமிளகாயின் விலையும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளது. சிவப்பு மற்றும் பச்சை குடைமிளகாய் ஒரு கிலோகிராம் 900 ரூபாய்க்கும் மஞ்சள் குடைமிளகாய் ஒரு கிலோகிராம் 1,500 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது. *(ம-7)*

## மக்கள் அதிகம் கூடும் இடத்தில் முறிந்து விழும் நிலையில் சிதைவடைந்த மின்கம்பம்

*(கரணவாய்)*

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள மின்கம்பம் ஒன்று எந்த நேரத்திலும் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்படுவதால், அப்பகுதி மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

சீமெந்தினால் அமைக்கப்பட்ட குறித்த மின்கம்பத்தின் அடியில் இருந்து மேல் நோக்கியதாக அரைவாசி பகுதிக்கு மேல் சிதைவுக்குள்ளானமையால் வேகமாக காற்று வீசும் சந்தர்ப்பத்தில் முறிந்து விழும் அபாயம் காணப்படுகிறது.

எனவே பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் அதிகளவானோர் கூடும் இடத்தில் குறித்த மின்கம்பம் காணப்படுகின்றமையால் பெரும் அசம்பாவிதம் ஏதும் ஏற்படுவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை உடனடியாக அகற்றிவிட்டு புதிய மின்கம்பத்தைப் பொருத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

*(ம-7)*

## யாழ் - கொழும்பு ரயில் சேவை 19ஆம் திகதி முதல் நிறுத்தம்

*(கொழும்பு)*

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான ரயில் சேவைகள் திருத்தப் பணிகள் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

இந்திய அரசாங்கத்தினால் கிடைக்கப் பெற்ற 5 மில்லியன் அமெரிக்க டொலர் மானிய உதவிகள் மூலம், டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் சேதமடைந்த ரயில் மார்க்கங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அதன் ஓர் அங்கமாக குருநாகல் - மாஹோ சந்தி மற்றும் அநுராதபுரம் ரயில் நிலையங்களுக்கு இடையில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

புனரமைப்பு நடவடிக்கை காரணமாகக் குறித்த மார்க்கத்தின் ஊடான ரயில் சேவை இடைநிறுத்தப்படவுள்ளது.

அதன்படி வடக்கு ரயில் மார்க்கத்தில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பயணிக்கும் ரயில்கள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை மஹோ சந்தி வரை மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் பயணிகளின் நலன் கருதி காங்கேசன்துறைக்கும் அநுராதபுரத்திற்கும் இடையிலான ரயில் சேவைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது என்றார். *(ம-7)*

## யாழில் பட்டப்பகலில் மாயமான மோ. சைக்கிள்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத நபர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் BHU 3878 இலக்கமுடைய Pulser ரக மோட்டார் சைக்கிளை யாழ்ப்பாணம் 5ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் வீதியோரமாக நிறுத்திவிட்டு, அருகிலிருந்த கடையில் பொருட்களை கொள்வனவு செய்யச் சென்றுள்ளார்.


சில நிமிடங்களின் பின்னர் அவர் மீண்டும் வந்து பார்த்த போது, மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து காணாமல் போயுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட நபரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அருகில் உள்ள சிசிடிவி காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். *(ம-7,60)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

01



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கையில் எந்தவொரு மாகாண சபையும் தற்போது செயற்பாட்டில் இல்லை. ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே மாகாணங்களின் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாகாண சபை முறைமை ஊடாக, கொஞ்சமேனும் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரங்கள் இப்போது முழுவதுமாக கொழும்பின் கட்டுப்பாட்டில் உள்ளன.

கிழக்கு, வட மத்தி, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளின் ஆட்சிக்காலம், 2017 ஆம் ஆண்டே நிறைவடைந்து விட்டது. வடக்கு, வட மேற்கு, மத்தி ஆகிய மாகாணங்களின் பதவிக்காலம், 2018 இல் காலாவதியானது. மேல், ஊவா, தென் ஆகிய மாகாண சபைகளின் ஆட்சிக்காலம், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரே காலாவதியாகிவிட்டது. கடந்த 6 -8 வருடங்களுக்கு மேல் ஆளுநர்களின் கட்டுப்பாட்டிலேயே மாகாணங்களின் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடக்குமா? இல்லையா? நடத்துவார்களா? நடத்த மாட்டார்களா? பழைய முறையிலா அல்லது புதிய முறையிலா என்ற ஐயம் இன்று தோன்றியிருக்கிறது. நாட்டில் பேசுபொருளாக உருவாகியுள்ள மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பலரும் பல கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

மாகாண சபைத் தேர்தல்கள் நடத்துவது தொடர்பில் தனக்கு தீர்மானம் எடுக்க முடியாது எனவும் அது தொடர்பில் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் 07.11.2025 ஆம் திகதி வரவு- செலவுத் திட்டத்தை சமர்ப் பித்து ஜனாதிபதி உரை நிகழ்த்தியிருந்தார். உரையை நிறைவு செய்யும் தருவாயில் எதிர்க்கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான முறைமை இன்றில்லை. அதற்கான எல்லை நிர்ணயம் அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. அந்த அறிக்கையைச் சமர்ப்பித்த முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபாவே அதற்கெதிராக வாக்களித்தார்.

நான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இப்போது எங்களிடம் தேர்தலை கேட்கிறீர்கள்? இன்று சட்டத்தில் இடமில்லை தேர்தலை நடத்துவதற்கு. அதனால் 2026 ஜனவரியில் தேர்தல் நடத்துவதற்கான சட்டத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என சட்டமா அதிபரிடம் விளக்கம் கேட்கவுள்ளோம்.

விகிதாசார முறைமையை இல்லாதொழிக்க 2007 இலிருந்து 10 வருடங்களாக சட்டத் திருத்தம் தொடர்பில் பல கட்சிகள் தொடர் பேச்சுவார்த்தைகள் நடத்தின. அதன் முடிவாகவே கலப்புத் தேர்தல் முறை உருவாக்கப்பட்டது. பழைய முறையில் எவ்வாறு தேர்தலை நடத்துவது. எனக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த சட்டதிட்டம் இல்லை. பாராளுமன்றத்தில் நீங்கள் எனக்கு சட்டத்தை இயற்றித் தாருங்கள் என்றார்.

மேலும் கூறுகையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்காக வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து சட்டமியற்றுங்கள். தேர்தலை நடத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் கூட்டப்பட்ட மகாநாடு ஒன்றில் எதிர்க்கட்சிகளும் சில சிவில் சமூக அமைப்புக்களும் தாமதமின்றி விரைவாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்குதல்களை கொடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தன. அடுத்த வருடம் வரை காத்திராமல் இந்த வருடத்திற்குள்ளாகவே தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் அவை கோரிக்கை விடுத்திருந்தன.

மாகாண சபைச் சட்டம் பாராளுமன்றத்தால் திருத்தப்படும் வரை மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணைக் குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

மாகாண சபைத் தேர்தல்கள் பழைய முறையில் நடத்தப்பட வேண்டுமானால், சட்டத்தில் சேர்க்கப்பட்ட திருத்தத்தை நீக்க வேண்டும். தேர்தல் ஆணைக் குழுவுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆனந்த ரத்நாயக்க கூறினார்.

நீண்டகாலமாக தாமதிக்கப்படும் மாகாண சபைத் தேர்தல்களை அடுத்த வருடத்திற்குள் நடத்துவதற்கு அரசாங்கம்உத்தேசித்திருக்கிறது என்றும் தற்போதைய எல்லை நிர்ணயச் செயன்முறை நிறைவடைந்தவுடன் தேர்தல்கள் குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் 2025.10.09 பாராளுமன்றத்தில் அறிவித்தார். "மாகாண சபைத் தேர்தல்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் நடத்துவதா அல்லது கலப்புத் தேர்தல் முறையின் கீழ் நடத்துவதா என்பதை நாம் பிறகு தீர்மானிப்போம்.

இதை பாராளுமன்றமே தீர்மானிக்க முடியும். தேர்தல் முறை குறித்து தீர்மானிப்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும்" என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் இராசமாணிக்கமும் ஜீவன் தொண்டமானும் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தல்களைப் போன்று மாகாண சபைத் தேர்தல்களையும் கலப்பு முறையின் கீழ் நடத்துவதற்காக 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் 2017ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின் கீழ் மாகாணங்களில் 222 தேர்தல் வட்டாரங்களையும் 215 பட்டியல் அடிப்படையிலான ஆசனங்களையும் நிர்ணயம் செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஆனால், அந்தக் குழு 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பித்த அறிக்கையை பாராளுமன்றம் நிராகரித்தது.

அவ்வாறு எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை நிராகரிக்கப்படும் பட்சத்தில், பிரதமர் தலைமையிலான குழு ஒன்று அதை மீள்பரிசீலனை செய்து இரு மாதங்களுக்குள் புதிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது.

அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு இரு மாதங்களில் எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையை முழுமையாக மீள்பரிசீலனை செய்வது சாத்தியமில்லை என்று ஒரு அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அதற்கு பிறகு புதிய மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படாமல் 8 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டது. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் இறுதியாக 2014ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலத்திற்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று தேர்தல்களின் போது தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி வழங்கியது. ஆனால் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை.

அமைச்சரவை வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் புதியதொரு எல்லை நிர்ணயக்குழு நியமிக்கப்படுமாக இருந்தால், அது புதிதாக அதன் செயன்முறைகளைத் தொடங்கும் பட்சத்தில் அடுத்த வருடம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது எந்தவிதத்திலும் சாத்தியமில்லை. அதனால் மீண்டும் தேர்தல்கள் ஓரிரு வருடங்கள் தாமதிக்கப்படுவதற்கான வாய்ப்பே இருக்கிறது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை...

ரசுக் கட்சி ஆதரவளிக்காது என அதன் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியில் இருந்தும், கல்வி அமைச்சர் பதவியில் இருந்தும் ஹரிணி அமரசூரியவைப் பதவி நீக்கம் செய்வதற்காக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக் கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதுடன் அதற்கான கையெழுத்தையும் சேகரித்து வருகின்றனர்.

எனினும் அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கையெழுத்திடாது எனத் தெரிவித்துள்ளார். ஹரிணி அமரசூரிய பெண் பிரதமர் என்ற அடிப்படையிலும் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சரியான ஆதாரங்களை எவரும் வெளியிடாமை ஆகிய காரணங்களுக்காக அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எமது கட்சியினர் கையெழுத்திடவில்லை எனத் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய அந்தக் கற்றல்தொகுதி நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்காக அவரைப் பதவி நீக்கக் கோருவதை ஒரு அரசியல் ரீதியான பழிவாங்கலாகவே தமது கட்சி கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலும் கட்சியின் தலைமையுடன் கலந்துரையாடியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## வடமராட்சி...

பற்றியுள்ளதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை குறித்த இடத்தைத் திடீரென சுற்றி வளைத்த மருதங்கேணிப் பொலிஸார் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்று கொண்டிருந்த டிப்பருடன் சாரதியைக் கைது செய்தனர்.

விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## 500 வீடுகளை...

இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப் படவுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 500 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பட்டியல்களை சுற்றுநிருபத்திற்கு அமைய தெரிவு செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினார். மேலும், வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறாத நபர்களுக்கான கொடுப்பனவு தேவைப்படுபவர்களுக்கான எண்ணிக்கை தொடர்பாகவும் பிரதேச செயலாளர்களிடம் கேட்டறிந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.(ம-7)

## யாழ்ப்பாணத்...

மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கிலிருந்து நேரடியாக ஏற்றுமதிச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரால் இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குக் கடிதம் மூலம் ஏற்கெனவே கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அக்கோரிக்கைக்கு அமைவான விசேட கலந்துரையாடல், ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது வடக்கின் ஏற்றுமதிச் சவால்கள் குறித்து ஆளுநர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விவசாய மற்றும் ஏனைய உற்பத்தியாளர்கள், தமது உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்குத் தற்போதைய நிலையில் மூன்றாம் தரப்பினரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனால் உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான இலாபம் குறைவடைகின்றது.

இந்நிலையை மாற்றியமைக்கும் வகையில், ஒரு விவசாயி தனது உற்பத்திப் பொருளைத் தானே நேரடியாக ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றவகையிலான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். இத்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்த சுங்கத் திணைக்களம் உதவ வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட,

இந்தத் திட்டத்துக்குக் கொள்கையளவில் நாம் இணக்கத்தை வெளியிடுகின்றோம். தற்போதுள்ள சில நடைமுறைச் சிக்கல்களைத் துரிதமாகத் தீர்த்து, வெகு விரைவில் யாழ்ப் பாணத்திலிருந்து நேரடி ஏற்றுமதிக்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்போம் எனக் குறிப்பிட்டார். (ம-7)

## கடற்...

பிரதேச சபை உறுப்பினரும் ஜனநாயக தமிழரசுக் கட்சியின் மகளிர் அணி உப செயலாளருமான நிரஞ்சினி ஜெலஸ்ரனிஸ்லாஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் தீவகம் வடக்கு ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் எழுவை தீவு J/39கிராம அலுவலர் பிரிவில் காளவாடியடைப்பு என்ற இடத்தில் தனியாருக்குச் சொந்தமான 2 பரப்புக் காணி எதிர்வரும் 20ஆம் திகதி காலை 09 மணிக்கு இலங்கை கடற்படைத் தேவைக்காக சுவீகரிப்படவுள்ளது.

அதேபோன்று, எதிர்வரும்21 ஆம் திகதி காலை 09 மணிக்கு, எழுவை தீவு மூன்றாம் வட்டாரத்தில், பொதுமகனுக்குச் சொந்தமான 53 பேர்ச்சஸ் அளவுள்ள காணி, கடற்படையின் எலரா படையணி முகாம் அமைப்பதற்காக நிலஅளவைக் காரியாலயத்தினால் சுவீகரிப்படவுள்ளது.

சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பு, இதே காணிகளை கடற்படையினருக்காக சுவீகரிக்க முயன்ற போது, தீவுப் பகுதியைச் சேர்ந்த தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், எழுவை தீவு மக்களுடன் இணைந்து தடுத்து நிறுத்தியிருந்தனர்.

எனவே இந்தக் காணி சுவீகரிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 6072
V 1 5 9 8 5 8
அத சம்பத V 9 8 5 8
சீட்டிழுப்பு இலக்கம் 0647

சுப தவசக்
திகதி 2026.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 188
சிம்மம் 28 33 57 2425

தன நிதானய
திகதி - 2026.01.12
சீட்டிழுப்பு இலக்கம் - 2102
O 13 35 75 80 O

மெகா பவர்
திகதி 12/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2420
K 26 13 44 70 75

ஜய
திகதி 2026.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 0340
P 3 6 1 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4314
சீட்டிழுப்பு திகதி 12.01.2026
U 12 33 62 73
U

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.12
சீட்டிழுப்பு இலக்கம் 1381
மகரம் 25 38 52 56 மகரம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
12.01.2026 வெற்றி வாரம் 0780
X 3 7 4 1 7 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,692,585.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3046
சீட்டிழுப்பு திகதி 2026.01.12 தினம் திங்கட்கிழமை
55 70 79 80 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,015,244.00

சனிதா
திகதி 12.01.2026 வெற்றி வாரம் 5207
22 31 40 65 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,299,617.20

சசிரி
வெற்றி வாரம் 876
சீட்டிழுப்பு திகதி 12.01.2026
திங்கட்கிழமை
07 20 21
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4758
சீட்டிழுப்பு திகதி 12.01.2026 தினம் திங்கட்கிழமை
02 08 21 35
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,360,005.20

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 04 20 21 23 48
2222
12.01.2026 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.619,969,890.00

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2872
சீட்டிழுப்பு திகதி 2026.01.12
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,314,174.40
06 22 62 73 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4808)

076 825 7716 (ஆகாஸ்)



## மணப்பெண் தேவை

01. வண்ணார்பண்ணை, இந்து, 1997, சித்திரை, Masters, MBA, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
02. காரைநகர், இந்து, 1988, புனர்பூசம், Msc in Engineering, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24112)
03. திருநெல்வேலி, இந்து, 1989, அஸ்தம், Bsc Hons, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04. திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, Bsc, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05. கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52796)
06. நீர்வேலி - புலோலி, இந்து, 1991, பூரட்டாதி, Bsc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32143)
07. கொக்குவில், இந்து, 1990, விசாகம், Bio Engineering (oslo), Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30569)
08. நீர்வேலி, இந்து, 1992, அவிட்டம், Bachelor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30682)
09. பருத்தித்துறை, இந்து, 1993, ரேவதி, Bachelor of Civil Engineering, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32449)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (6551)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
076 528 4510


## கட்டியெழுப்பும்...

'Rebuilding Sri Lanka' தேசிய வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, இன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாக லோட்டஸ் அரங்கில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழப்புகள், தனியார் மற்றும் அரச சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் உட்பட இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் பாதித்த டித்வா சூறாவளி அனர்த்தத்திற்குப் பின்னரான புனர்வாழ்வு மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காக உயர் மட்ட, நன்கு ஒருங்கிணைந்த தேசிய மீட்பு பொறிமுறையின் விரைவான மற்றும் அவசரத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் 'Rebuilding Sri Lanka' வேலைத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

நாட்டின் மீள்கட்டமைப்புத் திட்டத்திற்கு தற்போது மூன்று மூலோபாய அணுகுமுறைகளின் கீழ் நிதியளிக்கப்படுகிறது.

அதன்போது, முக்கியத்துவத்தின் அடிப்படையில் மீள் ஒழுங்கமைப்பு (Re-purposing) செய்முறையின் கீழ் தற்போது செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டங்களின் நோக்கங்களை மாற்றி செயற்படுத்தல், மறு ஒதுக்கீட்டின் (Re-allocating) கீழ் நிதி முகாமைத்துவச் சட்டத்தின் விதிகளின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமான தொகையை ஒதுக்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

(ம-7)


## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான




காலுறைகள்

மொத்த கொள்வனவுக்கு
விசேட விலைக்கழிவு (C-4809)

ஸ்ரீமுருகன் No.303, K.K.S Road, Jaffna.



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் | Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669 (6554)



## வீட்டுக்கு சைவசமயத்தில் குடும்பம் தேவை

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தொண்டர் வீட்டுக்குத் தேவை.
யாழ்ப்பாணம் சுன்னாகம் கிழக்கு ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் வீட்டுக்கு நிரந்தரமாக சைவசமய குடும்பம் ஒன்று தேவை.
வீட்டு இல. 54/4, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
077 197 5335, 077 540 4570, 074 197 5230 (6547)


## மரண அறிவித்தல்

தோற்றம்
25 - 03 - 1958



மறைவு
12 - 01 - 2026

### மாணிக்கம் தெய்வேந்திரன் (பொறியியலாளர்)

நாகலிங்கமுதலியார் வீதி, பருத்தித்துறையினைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவினை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் தெய்வேந்திரன் அவர்கள் நேற்று 12.01.2026 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - ஞானாம்பிகை தம்பதியரின் அன்புப் புதல்வனும் நாகலிங்கமுதலியார் தெய்வப்பிள்ளை அவர்களின் பேரனும் தமயந்தி தெய்வேந்திரன் அவர்களின் பாசமிகு கணவரும் திபாகர், திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கோபிகா, டிசான் ஆகியோரின் மாமனாரும் கண்மணி அவர்களின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற ரதி மற்றும் தெய்வேஸ்வரி, இந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற Dr.K.மயிலேறும்பெருமாள் மற்றும் ராஜ்குமார் ஆகியோரின் மைத்துனரும் அருண், சுலக்ஷனா ராஜசேகர், ஞானகி செல்வகுமார், மயூரன், சிவபாலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் சிட்னி, அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளமையால் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 571 8383

(C-4810)


## Happy Supermarket - உரும்பிராய்




| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3 Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg நீட்டலப்பச்சை | - 229/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 01 டசின் தீப்பெட்டி | - 155/= | ~~240/=~~ |
| 01 பெட்டி கற்பூரம் | - 290/= | ~~390/=~~ |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 135/= | ~~150/=~~ |

உங்கள் Happy Supermarket உரும்பிராயில் பொங்கல் பொதி ஒன்றை கொள்வனவு செய்து Happy go green bag ஒன்றினை இலவசமாக பெற்றிடுங்கள். (1928)




| SIZE | PRICE |
|---|---|
| 10 | - 590/= |
| 12 | - 770/= |
| 14 | - 890/= |
| 16 | - 990/= |

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30



## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ஊரெழு கணேச வித்தியாசாலைக்கு அருகாமை.
- 24 அடிப்பாதை.
- ஊரெழு பிள்ளையார் கோயிலடியில் இருந்து 1 Km தூரம்.
- 1 பரப்பின் விலை - 27 00 000 /=
  இருபத்தேழு இலட்சம் ரூபா
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 074 018 8731
075 412 9203 (6552)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org